சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**OS.No. 1210 / 2022**

பி.வா.சா.1. பொம்முராஜ் 20.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனது தக்கனார் பெயர் தங்கவேல் என்ற சென்றாயப்பெருமாள் என்றால் சரிதான். தங்கவேல் என்ற சென்றாயப்பெருமாளுக்கு நான், எனது அண்ணன் செல்வராஜ் மற்றும் அக்கா சந்திரா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான் எனது அண்ணன் செல்வராஜ் மனைவி ரம்யா 1-ம் வாதி என்றும் எனது அண்ணனின் மகள் கலைச்செல்வி 2-வது வாதி என்றால் சாதான். தாவா 2-ம் பிரதிவாதியாக உள்ள சந்திரா எனது மனைவி என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனக்கும் எனது அண்ணன் செல்வராஜ் என்பவருக்கு எனது அப்பா தங்கவேல் என்ற சென்றாயப்பெருமாளுக்கும் எனது அக்கா சந்திராவுக்கும் நால்வருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவும் எனது அக்காவுக்கும் தாவா சொத்துக்களில் அவர்களுக்கு உள்ள பாகத்தை பொறுத்து 12.07.2007ம் தேதி தாவா சொத்துக்களை பொறுத்து அவர்களுக்கு உள்ள பாத்தியத்தை விடுவித்து எனது பெயருக்கும் எனது அண்ணன் பெயருக்கும் பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முழுவதும் விடுதலை பத்திரத்திற்கு பின்னிட்டு எனக்கும் எனது அண்ணனுக்கும் மட்டுமே பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயருக்கும் எனது அண்ணன் பெயருக்கும் கூட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நானும் எனது அண்ணனும் தாவா சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவாசொத்துக்களை பொறுத்து வாய்க்கரால் பாகபிரிவினை ஏற்படவில்லை என்றும் வழக்கிற்காக வாய்ககரால் பாகம் ஏற்பட்டதாக சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. வாய்க்கரால் பாகபிரிவினையில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படுவது நடைமுறைக்கு விரோதமானது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் பகுதி எனது நிலத்திற்கு அருகாமையிலேயே ஒதுக்கப்பட்டதாக சொல்வது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பெண் பாலரான வாதிகளை ஏமாற்றி எனது அண்ணனின் பாகத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு நான் வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படாத சொத்தை எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. முறையாக பாகப்பிரிவினை செய்யப்படாமல் தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள உட்பிரிவுகளும் அதன் பேரில் வழங்கப்பட்ட பட்டாக்களும்

செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே எனது அண்ணனுக்கு ஏய்ட்ஸ் நோய் இருந்தது என்றால் சரியல்ல. 1-ம் வாதியை எனது அண்ணனுக்கு திருமணம் செய்து வைக்கும்பொழுதே அவருக்கு உள்ள தீர்க்கமுடியாத வியாதியை மறைத்து திருமணம் செய்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அண்ணன் செல்வராஜ் 27.09.2010ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். பின்னர் 1ம் வாதி கூலி வேலை செய்து தான் 2-ம் வாதியை பராமரித்தும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வீடுகட்டுவதற்கு 1-ம் வாதி ரம்யா என்னிடம் 3 இலட்சம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1-ம் வாதி ரம்யா தாவா சொத்தில் வீடுகட்டுவதற்காக என்னிடம் 3 இலட்சம் கொடுத்துள்ளார் என்றும் நான் வழக்கிற்காக 3 இலட்சம் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த காலத்தில் தாவா சொத்துக்களுக்கு எனது அண்ணன் பெயரிலும் எனது பெயரிலும் கூட்டு பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து இன்று வரை முறையான பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றும் நான் அந்த உண்மை விபரங்களை மறைத்து பொய்யான காரணங்களை குறிப்பிட்டு அதற்கு ஆதரவாகவும் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.24 10:13:48 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்